

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களிடம் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தமது இல்லத் திருமண வரவேற்பு விழாவையொட்டி அழைப்பிதழை நேரில் சந்தித்து வழங்கினார்.



கோயம்புத்தூர் – வ.உ.சி. மைதானத்தில், திராவிடர் கழகம் சார்பில் நடைபெற்ற, "பெரியார் அறிவுலகம் கண்ட திராவிட நாயகருக்கு நன்றி பாராட்டு விழாவில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு – முன்னாள் அமைச்சரும், கரூர் மாவட்டக் கழகச் செயலாளருமான வி.செந்தில்பாலாஜி நினைவுப் பரிசு வழங்கினார். திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி, முன்னாள் அமைச்சர் எ.வ.வேலு எம்.எல்.ஏ. உள்ளிட்டோர் மேடையில் உள்ளனர்.

மேயர் பிரியா ராஜன் பங்கேற்பு! துறைமுகம் தொகுதியில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில்

புதிதாகக் கட்டப்பட்ட குழந்தைகள் வளர்ச்சி மையம் - பல்நோக்கு மையக் கட்டடம்!

மேனாள் அமைச்சர் பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்!

சென்னை, நவ.7-

சென்னை துறைமுகம் சட்டமன்றத் தொகுதிக் குட்பட்ட பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, வார்டு-59, பாரிமுனை தேர்வாணை யம் சாலையில், 2025-2026ஆம் ஆண்டு துறைமு கம் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி யிலிருந்து ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் புதிதாகக் கட் டப்பட்ட குழந்தைகள் வளர்ச்சி மையம் மற்றும் பல்நோக்கு மையக் கட்ட டத்தின் திறப்பு விழா நேற்று (06.11.2026) வெள் ளிக்கிழமை மாலை நடை பெற்றது.

இவ்விழாவில், சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மேனாள் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரும், துறை முகம் சட்டமன்ற உறுப்பி னருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. அவர்கள் கலந்து கொண்டு, புதிதாகக் கட் டப்பட்ட குழந்தைகள் வளர்ச்சி மையம் மற்றும் பல்நோக்கு மையக் கட்ட டத்தைத் திறந்து வைத்து, பொதுமக்களின் பயன் பாட்டிற்கு அர்ப்பணித்தார்.

இந்நிகழ்ச்சியில் பெருந கர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா ராஜன், துறைமுகம் மேற்கு பகுதிக் கழகச் செயலாளர் எஸ். முரளி, துறைமுகம் கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் எஸ். இராஜசே கர், 5வது மண்டலக் குழுத் தலைவர் பி. ஸ்ரீராமுலு,எம். வி ஜ ய கு மா ர் , ஜி . எ ம் . தேவன் இசட் ஆசாத் .எம். சி,எம். இப்ராஹிம் கனி வெ. பரிமளம். எம். சி. எல். நவீன், எல் சம்பத்குமார் பா பிரதீப் குமார் எம் விநாய கம் பி விஜயகுமார்,வட்ட கழகச் செயல்வீரர்கள் டி. சதீஷ்குமார் வே.பா.பிரபா கரன், ஜி.ராமமூர்த்தி, பா. அண்ணாதுரை மா ஜெய் சங்கர், பா.கதிரவன், இரா ரவிச்சந்திரன் எல் சத்யநா ராயணன், எஸ் புகழேந்தி, அஸ்லாம், டி. கதிரவன் என்ற ராஜா எம்பரத்குமார் கே கவியரசு ஆ.நா.பார்த்தி பன். மற்றும் மாநகராட்சி உதவி ஆணையாளர் நா. சத்திய நாராயணன்,செயற் பொறியாளர் கார்த்திக் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

குழந்தைகளின் ஆரம்ப காலப் பராமரிப்பு, ஊட் டச்சத்து மற்றும் முன்பருவக் கல்வி நடவடிக் கைகளை மேம்படுத்துவ தோடு, அப்பகுதி மக்களின் பல்வேறு பொதுப் பயன்



பாட்டுத் தேவைகளையும் நிறைவேற்றும் வகையில் இந்தப் புதிய கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

துறைமுகம் சட்டமன் றத் தொகுதி மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் வகையில் ரூ.60 லட்சம் மதிப்பீட்டில் உருவாக்கப்பட்டுள்ள இப் புதிய குழந்தைகள் வளர்ச்சி மையம் மற்றும் பல்நோக்கு மையக் கட்டடம் அப்ப குதி மக்களின் பயன்பாட் டிற்கு அர்ப்பணிக் கப்பட்டது.

இத்திறப்பு விழாவிற்கு பிறகு செய்தியாளர்களை பி.கே. சேகர்பாபு எம்.எல். ஏ. சந்தித்தபோது..

பெரியார் நூலகத்திற்கு வழங்கப்பட்ட புத்தகங்கள் தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சையில், அந்தப் புத்த கங்கள் அனைத்தும் திரா விட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் வாங்கப் பட்டவை அல்ல என்றும், தற்போதைய ஆட்சிக் காலத்திலும் புத்தகங்கள் வாங்கப்பட்டிருப்பதாக சமூக வலைதளங்களில் தக வல்கள் வெளியாகி வருவ தாகவும் சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலா ளரும் மேனாள்ஞ் அமைச் சருமான பி.கே. சேகர்பாபு எம்.எல்.ஏ. தெரிவித்தார்.

இது தொடர்பாக செய் தியாளர்களிடம் அவர் கூறி யதாவது:

"பெரியார் நூலகத்திற்கு வழங்கப்பட்ட புத்தகங்கள் அனைத்தும் திராவிட முன் னேற்றக் கழக ஆட்சியில் வாங்கப்பட்டவை என்று கூறுவது சரியானதல்ல.

இன்றைக்குக்கூட முக நூலில் பல்வேறு பதிவுகள் வெளியாகியுள்ளன. குறிப் பாக, அந்த நூலகத்தில் உள்ள புத்தகங்களில் ஜூன் மாதத்தில் முத்திரையிடப்ப ட்டிருப்பதாக சமூக ஆர்வ லர்கள் பதிவிட்டு வருகின் றனர்.

ஜூன் மாதம் யாரு டைய ஆட்சி நடைபெற் றது? அந்தப் புத்தகங்களை வாங்குவதற்கான தொகை எங்கிருந்து செலுத்தப் பட்டது?

இந்த இரண்டு கேள்விக ளுக்கும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர் முதலில் விளக்கமளிக்க வேண்டும்.

புத்தகங்கள் வாங்கப்பட் டதற்கான வங்கி பரிவர்த் தனை ஆவணங்களையும், அதற்காகச் செலுத்தப் பட்ட தொகை குறித்த விவ ரங்களையும் அரசு வெளிப் படையாக வெளியிட வேண்டும் என்று சமூக ஆர் வலர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர்.

இந்த ஆட்சி அமைந்த பிறகும் பெரியார் நூலகத் திற்கு பல புத்தகங்கள் வாங் கப்பட்டிருப்பதாக முகநூ லில் பதிவுகள் வெளியாகி யுள்ளன.

எனவே, அனைத்து விவ ரங்களும் முழுமையாக வெளிவந்த பிறகுதான் உண்மையான நிலை என்ன என்பது மக்களுக்குத் தெரியவரும்.

எங்களுடைய முதல்வர் ஆட்சிக் காலத்தில் 'படி! படி! படி!' என்றுதான் கூறி னார். ஆனால், இன்றைய முதல்வர் 'குடி! குடி!' என்று சொல்லிக் கொண்டிருக்கி றார்.

சிறுவர்கள் தவறு செய்து விட்டு பின்னர் திருந்திக் கொள்ளலாம் என்று எங்க ளுடைய முதல்வர் ஒருபோ தும் கூறியதில்லை.

நான் இங்கு வரும்போது கூட முகநூலில் வெளியாகி யிருந்த பதிவுகளைப் பார்த்துக் கொண்டுதான் வந்தேன்.

பெரியார் நூலகத்தில் உள்ள புத்தகங்களில் ஜூன் மாத முத்திரை இருப்பதா கக் கூறப்படுகிறது.

நான் மீண்டும் ஒரே கேள்வியைத்தான் கேட்கி றேன்.

ஜூன் மாதம் யாரு டைய ஆட்சி? அந்தப் புத்த கங்களை வாங்குவதற்கான பணம் எங்கிருந்து செலுத் தப்பட்டது?

இதற்கான ஆவணங்களு டன் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் விளக்கம் அளிக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியு றுத்தி வருகின்றனர்.

முதலில் இந்தக் கேள்வி களுக்கு அவர்கள் பதில் சொல்லட்டும். அதன் பிறகு முழுமையான உண்மை மக் களுக்குத் தெரியவரும்."

இவ்வாறு பி.கே. சேகர் பாபு எம்.எல்.ஏ. செய்தியா ளர்களிடம் தெரிவித்தார்.

த.வெ.க. அரசு தொடர்ந்து கடன் வாங்குவதால் அச்சம்:

அரசு ஊழியர்கள் விருப்ப ஓய்வு கேட்டு அதிகளவில் விண்ணப்பம்!

சென்னை, நவ. 7-

த.வெ.க. அரசு தொடர்ந்து கடன் வாங்குவதால், அச்சம் அடைந்துள்ள அரசு ஊழியர்கள், விருப்பஓய்வுகேட்டு, அதிகளவில் விண்ணப்பித்து வருவதாக, தகவல் வெளியாகி உள்ளது.

தமிழக அரசு துறைகளில் ஒன் பதுலட்சத்திற்கும்அதிகமானஅரசு ஊழியர்கள் பணிபுரிகின்றனர். இவர்களுக்கு ஊதியம் உள்ளிட்ட சலுகைகள், மனிதவளமேலாண் மைத் துறை வாயிலாக வழங்கப் படுகின்றன. அரசு ஊழியர்களின் ஓய்வுவயது 60 ஆகும். பல்வேறு துறைகளில், ஊழியர்கள் பற்றாக் குறைஉள்ளதால்,தற்போதுபணி புரிவோருக்கு, கூடுதல் பணிச் சுமை ஏற்பட்டுள்ளது. அரசுத் துறைகளில் மூன்று லட்சம் பணி யிடங்களை நிரப்ப வேண்டியுள் ளது.

ஆனால்,அரசின்நிதிநெருக்கடி காரணமாக, காலி பணி யிடங்களை நிரப்புவதில் சிக்கல் நிலவுகிறது.

கடந்த தி.மு.க., ஆட்சியில், மார்ச் மாத நில வரப்படி, அரசின் கடன் சுமை 10 லட்சம் கோடி ரூபா யாக இருந்தது. த.வெ.க., அரசு பொறுப்பேற்ற பின், கடந்த மே மாதத்தில்இருந்து,ஜூன்வரை,20 ஆயிரத்து 881கோடிரூபாய் கடன் பெறப்பட்டது. அக்டோபர் மாதம் வரை கடன் பெறுவது, இரண்டு மடங்கு அதிகரித்துள்ளதாக நிதித் துறை கூறியுள்ளது.

எனவே, கடன்சுமை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இத னால், அரசு ஊழியர்களுக்கான பென்ஷன் உள்ளிட்ட பணி ஓய்வு பலன்கள்கிடைக்குமாஎன்றசந்தே கம் எழுந்துள்ளது. பணிச்சுமை உள்ளிட்ட காரணங்களால், விருப்ப ஓய்வில் செல்ல விருப்பம் தெரிவித்து அரசிடம் மனு கொடுப் போர் எண்ணிக்கை அதிகரித் துள்ளது.

விருப்பஓய்வில்செல்வதற்கான மனு கொடுத்து, 90 நாட்களுக்கு பின்னரே, அந்த மனு மீது நடவ டிக்கை எடுக்கப்படும். அதுவரை மனுவைதிரும்பப்பெறஅவகாசம் வழங்கப்படும். தலைமைச் செய லகத்தில் மட்டும், நீர்வளத்துறை கூடுதல்செயலர்தொடங்கி,25க்கும் மேற்பட்டோர்விருப்பஓய்வுகேட்டு மனுஅளித்துள்ளனர்.

மா நி ல ம் மு ழு வ தும் நூற்றுக்கணக்கானோர் மனு அளித்துள்ளனர். பணிச்சுமை, பழைய ஓய்வூதியதிட்டம்செயல்ப டுத்தாதது, அரசின் நிதி நிலைமை உள்ளிட்ட காரணங்களால், பல ரும் அரசு பணியிலிருந்து வெளி யேறவிரும்பும்நிலையில்,புதிதாக ஆட்களைதேர்வுசெய்யமுடியாது என்பதால், அரசு ஊழியர்களின் ஓய்வு வயதை உயர்த்த, அரசு ஆலோசித்து வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

ஹைதராபாத்தில் ஒரு திரைப்படத்தின் சிறப்புக் காட்சியின் போது ஏற்பட்ட துயரக் காட்சிகள் தமிழ்நாட்டிலும் நடக்க வேண்டும் என விஜய் அரசு ஆசைப்படுகிறதா?

பொதுமக்களின் பாதுகாப்பை பணயமாக வைத்து வழங்கப்பட்டுள்ள 6 மணிக் காட்சி அனுமதிக்கு கண்டனம்!

கழக சட்டத்துறை இணைச் செயலாளர் இ.பரந்தாமன் அறிக்கை!

சென்னை, நவ. 7-

தி.மு.க. சட்டத்துறை இணைச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான இ.பரந் தாமன் வெளியிட்டுள்ள அறிக்கை வருமாறு:-

புதிய படம் வெளியா கும் நாளில் இருந்து ஒரு வாரத்துக்கு தினமும் காலை 6 மணி முதல் மறு நாள் அதிகாலை 2.30 மணி வரை 6 காட்சிகளை திரை யிடலாம் என்றும், சனி ஞாயிறு, உள்ளூர் பண் டிகை, பொது விடுமுறை நாள்களிலும் 6 காட்சிக ளைத் திரையிட அனுமதி வழங்கியிருக்கிறது தவெக அரசு.

இளைஞர் சமுதாயத் தையும், தமிழ்நாடு கலாச் சாரத்தையும் சீரழிக்கும் நோக்கில் பொழுது விடிந்த வுடன் புதிய திரைப் படங் களை தியேட்டர்களில் திரையிடலாம் என்று த.வெ.க. அரசு பிறப்பித் துள்ள உத்தரவு பேரதிர்ச்சி யளிக்கிறது.

நான் முதல்வன், புதுப் புது நூலகங்கள், தமிழ்ப் புதல்வன் திட்டம், புது மைப் பெண் திட்டம், முத லமைச்சரின் காலை உண வுத் திட்டம் என்றெல்லாம் மாணவர்களின் அறிவுசார் தமிழ்நாட்டின் பக்கமாக அழைத்துச் செல்ல திரா விட மாடல் ஆட்சியில் வியத்தக திட்டங்கள் நிறை வேற்றப்பட்டன. ஆனால், தவெக ஆட்சியிலோ "பொழுது விடிந்ததும் சினிமா" "காலை 6 மணி



முதல் ஒரு நாளைக்கு 6 காட்சிகள் திரையிடலாம்" என உத்தரவு அளித்து, ஒரு *Generational Destruction*யைச் செய்யத் தொடங்கி விட் டது!

இதே முதலமைச்சர் விஜய்யின் லியோ பட ரீலீ ஸின் போதுதான் ஒரு திரையரங்கில் காலை 6 மணிக் காட்சியில் ஏற் பட்ட நெரிசல், கண்ணாடி கள் உடைப்பு, கலாட்டா என மக்கள் பதற்றத்தில் மூழ்கினார்கள். அப்படி யொரு ஆபத்தை தவிர்த்தி டவே திராவிட மாடல் ஆட்சியில் காலை 6 மணி காட்சிக்கு மட்டுமல்ல, ஒரு நாளைக்கு 6 காட்சிக ளுக்கு தடை விதிக்கப் பட்டது. அன்றைக்கு "7 மணி காட்சிக்கு அனுமதி கேட்டு" லியோ படத் தரப் பினர் மாண்பமை உயர்நீதி மன்றத்திற்கு சென்ற போது கூட பொதுமக்கள் பாது காப்பு முக்கியம் என்ப தையே உயர்நீதிமன்றம் வலியுறுத்தியது. ஆகவே தான் 6 மணி அல்லது 7 மணிக் காட்சியோ, ஒரு நாளைக்கு 6 காட்சிகளோ அனுமதிக்க முடியாது என் பதில் திராவிட மாடல் அரசு உறுதியாக இருந்தது.

ஆனால் ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் விஜய் "6 மணி காட்சி மற்றும் ஒரு நாளைக்கு 6 காட்சிகள்" என புதிய திரைப்படங் களுக்கு உத்தரவிட்டுள் ளது மிகக் கொடுமையான கலாச்சாரத் தாக்குதல் மட் டுமல்ல, நீதிமன்ற உத்தர வுக்கு எதிரான செயலும் கூட!

அடுத்தடுத்துக் காட்சி கள் திரையிடப்படுவதால், மறு காட்சி தொடங்குவ தற்கு இடைப்பட்ட நேரம் மிகக் குறைவாக இருக்கும். அதனால், தியேட்டரை விட்டு வெளியே வருகிற வர்களும் உள்ளே நுழைப வர்களும் முட்டி மோதி அதனால் நெரிசல் ஏற் பட்டு, உயிரிழப்புகள் ஏற்ப டலாம். ஹைதராபாத்தில் ஒரு திரைப்படத்தின் சிறப் புக் காட்சியின் போது கூட்ட நெரிசலில் ஒரு பெண் உயிரிழந்த சம்பவம் இந்தியா முழுவதும் அறி யப்பட்ட நிகழ்வு. 2023ல் ஒரு திரைப்பட ரிலீஸின் போது சென்னை திரைய ரங்கம் அருகே, நள்ளிரவு 1 மணி சிறப்பு காட்சியைக் கொண்டாட வந்த ரசிகர் லாரியின் மீது ஏறி நடன மாடி கீழே விழுந்து உயிரி ழந்தார். இப்படி ஏதும் நடந்து விடக்கூடாது என் பதுதான் திராவிட மாடல் அரசின் நோக்கமாக இருந் தது. ஆனால் இப்போது விஜய் அரசு 6 காட்சிகள் அனு மதித்தித்து அது போன்ற துயர சம்பவங்கள் நடக்க வேண்டும் என ஆசைப்படுகிறதா என்ற கேள்வி எழுகிறது. தமிழ் நாட்டின் பெருமைகளை, பண்பாட்டை சீரழிக்கும் இ ப் ப டி யெ ா ரு முன்னெடுப்பை அதுவும் பொதுமக்களின் பாது காப்பை பணயமாக வைத்து விஜய் அரசு எடுத் திருப்பது கடும் கண்டனத் திற்குரியது.

புதுப்படம் வெளியா கும் போது மற்ற மாநிலங்க ளில் காலை ஆறு மணிக்கு காட்சிகள் திரையிடுவதால் த மி ழ் நா ட் டி ல் முன்கூட்டியே திரை விமர் சனம் வெளியாகி, படத் தின் வெற்றி வாய்ப்பை பாதிக்கிறது என்கிற நோக் கத்தில் தமிழ்நாடு நடப்பு சினிமா தயாரிப்பாளர் சங் கம் சொல்லியிருக்கிறது. மனித உயிர்களை விட எந்த வகையிலும் திரைப்ப டத்தின் வெற்றி உயர்ந்த தில்லை. ஹைதராபாத் துயர நிகழ்வுக்கு பிறகு மற்ற மாநிலங்களில் கடு மையான கட்டுப்பாடுகள் விதித்து வருகிறார்கள். திரைப்படத்தின் வெற் றியை விட அடுத்த தலை முறை வாழ்க்கையின் வெற்றிதான் முக்கியம் என் பதை இந்த அரசு உணர வேண்டும்.

இவ்வாறு அவர் தனது அறிக்கையில் குறிப் பிட்டுள்ளார்.

சிவில் சர்வீஸ் முதன்மைத் தேர்வு முடிவுகள்!

தமிழ்நாட்டில் இருந்து 168 பேர் வெற்றி!

சென்னை, நவ. 7–

சிவில் சர்வீஸ் முதன்மைத் தேர்வு முடிவுகளை ஒன்றிய அர சுப் பணியாளர் தேர்வாணையம் வெளியிட்டுள்ளது. தமிழகத்தில் இருந்து 168 பேர் ஆளுமைத் தேர்வுக்கு தகுதி பெற்றுள்ளனர்.

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., ஐ.எஃப். எஸ். உள்ளிட்ட குடிமைப் பணிக ளுக்கு ஆண்டுதோறும் தேர்வுகள் முதல்நிலை, முதன்மை, ஆளுமை என 3 கட்டங்களாக நடத்தப்பட்டு வருகிறது. ஆயிரத்து 16 காலிப் பணியிடங்களுக்கான யு.பி.எஸ்.சி சிவில் சர்வீஸ் முதன் மைத் தேர்வு, கடந்த ஆகஸ்ட் 21 முதல் 30 வரை நடைபெற்றது. முதற்கட்டத் தேர்வில் தேர்ச்சி பெற்றவர்களில், மொத்தம் 13 ஆயிரத்து 343 பேர் முதன்மைத் தேர்வில் பங்கேற்றனர். தற் போது முதன்மைத் தேர்வில் வெற்றி பெற்றவர்களின் பட்டி யலை ஒன்றிய அரசுப் பணியா ளர் தேர்வாணையம் வெளியிட் டுள்ளது.

தீராவிட மாடல் ஆட்சியில் பயிற்சி!

இதில், 2ஆயிரத்து 526 பேர் தேர்ச்சி பெற்று, அடுத்தகட்டமாக ஆளுமைத் தேர்வுக்கு தகுதிபெற் றுள்ளனர். தமிழ்நாட்டிலிருந்து 168 பேர் ஆளுமைத் தேர்வுக்கு தகுதி பெற்றுள்ளனர். இதில், 79 பேர் திராவிட மாடல் ஆட்சியின் போது அமைக்கப்பட்ட அகில இந் திய குடிமைப்பணித் தேர்வுப் பயிற்சி மையத்தில் பயின்றவர் கள் ஆவர். ஆளுமைத் தேர்வுக்கு தகுதிபெற்றவர்கள், நவம்பர் 11 முதல் நவம்பர் 25 ஆம் தேதி மாலை 6 மணிக்குள் தேர்வா ணையம் கோரிய சான்றிதழ்கள், ஆவணங்கள் மற்றும் பிற தகவல் களை யுபிஎஸ்சி வலைதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். ஆளுமைத் தேர்வு நடைபெறும் தேதிகள் விரைவில் அறிவிக்கப் படும்.